**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.20
https://ngmtamil.in/

# புலவர் புராணத்தில் சைவப் புலவர்களின் வாழ்வியல் விழுமியங்கள்

**மு .வினோதினி**

உதவிப் பேராசிரியர், கதிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641018.

vinothinimphil@gmail.com

**முனைவர் கு.செல்வி, நெறியாளர்,**

டாக்டர் என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

## முன்னுரை

தண்டபாணி சுவாமிகள் இயற்றிய புலவர் புராணத்தில் சைவப் புலவர்களின் வாழ்வியல் நெறிமுறைகள் மனித சமுதாயத்திற்கு பல நற்கருத்துக்களை வழங்குகின்றன. நிலையாமை தத்துவங்கள் இறைவன் ஒன்றே என்ற சிந்தனை அறநெறி வாழ்வு என பலதரப்பட்ட வாழ்வியல் சிந்தனைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை எடுத்துரைப்பதாக புலவர்களின் வாழ்வில் இருந்தது எனலாம். மனிதனின் வாழ்வு துன்பம் நிறைந்ததாய் உள்ளது அதற்கான காரணங்களையும் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான வழிகளையும் புலவர்கள் வாழ்வு எடுத்துரைக்கிறது. அவர்கள் இறைத்தொண்டர்கள் என்று நிலையைத் தாண்டி வாழ்வியல் வழிகாட்டிகளாய் வாழ்ந்துள்ளனர் எனலாம்.

## நிலையாமை

உலகில் உள்ள அனைத்தும் ஒரு நாள் மறைந்து போகும் உடல் அழியக்கூடியது இளமை நீங்க கூடியது. அழகு சிதையக் கூடியது. இன்பம் செல்வம் எதுவுமே நிலை இல்லாதது என்பதை சித்தர்களும் புலவர்களும் தம் பாடல்களில் வலியுறுத்தினர்.

**நில்லா வற்றை நிலையின என்று ணரும்**
**புல்லறி வாண்மை கடை.** (குறள்-331)

நிலையில்லாத வாழ்க்கையின் தன்மையை அறிந்து அதன் வழி நடப்பதே சிறந்த வாழ்க்கையாகும். நிலையில்லாதவற்றை நிலையானவை என்று மயங்கி வாழ்பவர்கள் இழிநிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இன்று நம்மிடம் இருக்கும் செல்வம் நாளை நம்மிடம் இல்லாமல் போகலாம் .செல்வம் என்பதும் நிலையில்லாத தன்மை உடையது.

**நீளவீடு கட்டுநீர் நெடுங்கதவு சாத்துநீர்**

**வாழவேணும் என்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரே**

**காலன் ஓலை வந்தபோது கைய கன்று நிற்பீரே.** (சிவவாக்கியர் பாடல்-25)

என்ற பாடல் வழி சிவவாக்கியர் நாம் கட்டுகின்ற ஆடம்பர வீடும் சேர்த்து வைக்கும் செல்வங்கள் அனைத்தும் மரணத்தின் போது எடுத்துச் செல்ல முடியாது என்பதே உண்மை என்கிறார். மனிதனுடைய நிலை வெயிலுக்கு இளைப்பாற அவனுக்கு உதவாது அதுபோல மனிதன் தேடிய செல்வம் அவனுக்கு உதவாது என்பதை திருமூலர்,

**தன்னது சாயை தனக்குஉ தவாது கண்டு**

**என்னது மாடென்று இருப்பவர்கள் ஏழைகள்**

**உன் உயிர் போகும் உடல் ஒக்கப் பிறந்தது**

**கண்ணது காணொளி கண்டு கொளீரே.** (திருமந்திரம் பாடல்- 170)

என்கிறார்.

**அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**

**இவ்வுலகம் இல்லாகி யாங்கு.** (குறள்-331)

என்ற வள்ளுவரின் வாய்மொழிக் கேட்ப தேவைக்கேற்ப பொருளீட்டி சிறப்புடன் வாழ்தல் வேண்டும். நிலையில்லாத இளமையின் காரணமாக மனித மனம் இறுமாப்புக் கொள்கிறது. உடல் நன்கு இருக்கும் இளமை காலத்தில் மனிதன் எதனையும் பொருட்படுத்தாமல் வாழ்கிறான் என்பதை அப்பர்,

**அழகி யோம்இறை யோமெனும் ஆசையால்**

**ஒழுகி ஆவி உடல் விடு முன்னமே.....1**

இவ்வுடல் பல்வேறு குறைபாடுகள் உடையது என்பதை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இத்தகைய இளமை நிலையாமை பற்றி அப்பர் சம்பந்தரும் பல இடங்களில் கூறுகின்றனர்.

**பல்நீர்மை குன்றிச் செவிகேட்பிலா**

**படர்நோக்  கில்கண் பவளந் திற**

**நல்நீர்மை குன்றித் திரை தோலோடு**

**நரை தோன்றும்...2**

என்று சம்மந்தர் அறிவுறுத்துகிறார்.நமது உடல் நிலை இல்லாத தன்மையுடையது. உயிர் உடலை விட்டுப் போனால் அதனை யாரும் வைத்திருக்க மாட்டார்கள்.

**மாயும் மனிதரை மாயாமல்**

**வைக்க மருந்தில்லையே3**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

என்கிறார் பட்டினத்தார்.

**திரைக்குள் இருந்தசைப்போன் தீர்ந்த பொழுதே**

**தேகம் விழும் 4**

என்று பாம்பாட்டிச் சித்தரும்,

**என்னையறியாமல் இருந்தாட்டும் சூத்திரம்5**

என்று பத்திரகிரியாரும்,

**பற்றே பிறப்புண்டாகும் தாண்டவகோனே**

**அதைப் பற்றாது அறுத்துவிடு தாண்டவகோனே6**

என்று இடைக்காட்டுச் சித்தரும் குறிப்பிட்டுள்ளனர்.

மனித வாழ்வில் உறவுகளும் நிலையிலாத தன்மை உடையன. எந்த உறவும் மனிதன் இறக்கும் போது உடன் வருவதில்லை.

**காலினோடு கைகளும் தளர்ந்துகாம நோய்தனால்**

**ஏலவார் குழலினார் இகழ்ந்துரைப்பதன் மூலம்7**

என்றும்,

**மாத ராரோடு மக்களும் சுற்றமும்**

**பேதமாகிப் பிரிவதன் முன்னமே 8**

என்றும் சம்பந்தரும் நாவுக்கரசரும் குறிப்பிடுகின்றனர்.

**மனத்தூய்மை**

மன உணர்வுகளை அடக்குதல் என்பது அனைவருக்கும் சவாலாக இருக்கும் ஒரு நிலையாகும். இறையருளைப் பெற விரும்புவோர் வாய்மையுடன் வாழ வேண்டும் என்பதை,

**பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்**

**புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்9**

என்று எடுத்துரைக்கிறார் அப்பர்.

**மனத்தோடு வாய்மை மொழியிற்றவத்தோடு**

**தனஞ்செய் பாரிற் றலை** (குறள்-124)

மனதளவில் உண்மையானவனாக இருந்து மறந்தும் கூட பொய் கூறாது வாழ்பவன் தானமும் தவமும் ஒன்றாக செய்பவர்களை விட உயர்வானவர் என்கிறார் வள்ளுவர்.

**பொய் வழங்கி வாயும் பொறியறையும்10**

பொய் கூறுதல் அறவழி வாழாதாரின் செயல் என்கிறது திரிகடுகம்.இறையுணர்வு மட்டுமே ஐம்புலன்களை அடக்கும் வழி என்கிறார் அப்பர். இறைவனை மனம் உருகி வேண்டுதலும் செய்கிறார்.

**அரட்டர் ஐவரை ஆசறுத்திட்டு11**

**புழுப்பெய்த பண்டி தன்னைப் புறமொழி தோலால் மூடி**

**எழுக்கறா ஒன்பதவாய் ஒற்றுமை ஒன்றும் இல்லை**

**சழக்குடை இதனுள் ஐவர் சங்கடம் பலவும் செய்ய**

**அழிப்பனாய் வாழமாட்டேன் ஆரூர் மூலட்டனிரே12**

என்று இறைவனை வேண்டுகிறார் அப்பர்.மனதை அடக்கவில்லை எனில் பெண் ஆசை, பொருளாசை முதலிய தவறான வழியில் செல்ல நேரிடும்.

**கற்றதேல் ஒன்றுமில்லை காரிகை யாரோ டாடிப்**

**பெற்றதேற் பெரிதும் துன்பம்....13**

என்றும்

**மட்டுண்பார்கள் மடந்தையர் வாட் கண்ணால்**

**சுட்டுண் பார்கள் கருதுவது என் கொலோ14**

என்றும் கூறி பெண்ணாசையைத் தவிர்க்க வேண்டும் என்கிறார் அப்பர்.

**முலைத்தட மூழ்கிய போகங்களு மற்றவையுமெல்லாம்15**

என்று சம்பந்தரும் குறிப்பிடுகிறார். மனிதன் மனக்கட்டுப்பாடுடன் வாழ்ந்தால் மட்டுமே சமூக சிக்கல்கள் ஏற்படாமல் இருக்கும்.

**ஈகை குணம்**

எந்த எதிர்பார்ப்பும் இன்றி எல்லோருக்கும் உதவுதலே ஈகையின் சிறந்த நிலையாகும்.

**வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்**

**குறியெதிர்ப்பை நீரது உடைத்து** (குறள்-221)

என்ற வள்ளுவரின் வாக்குக்கிணங்க ஈகை குணமுடையவர்களாக மனிதர்கள் விளங்க வேண்டும் .

**இரப்பவருக்கு ஈய வைத்தார்**

**ஈபவர்க்கு அருளும் வைத்தார்**

**கரப்பவர் தங்கட் கெல்லாம்**

**கடுநர கங்கள் வைத்தார் 16**

என்கிறார் அப்பர். ஈகை குணம்கொண்டவர்கள் இறையருளால் இன்பமுடன் வாழ்வர் ஈகை உணர்வு அற்றவர்கள் நரகத்திலே இடர்படுவார். இருப்பவர் இல்லாதவர்க்கு கொடுக்கும் குணம் உடையவராய் இருக்க வேண்டும்..பிறர் பசியை போக்கும் குணமுடையவராகவும் நாம் இருக்க வேண்டும் .

**கடுகூர் பசிகாமம் கவலை பிணில்லார்17**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

என்கிறார் சம்பந்தர்.

**சமத்துவ சிந்தனை**

சாதி பாகுபாடற்ற அறவழி வாழ்க்கையே அனைவரும் அறிவுறுத்துகின்றனர் பல்வேறு குடும்பப் பின்னணியில் தோன்றியிருந்தாலும் உயர்வான பண்புகளையே முதன்மையாகக் கருதினர்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**

**செய்தொழில் வேற்றுமை யான்** (குறள்-972)

என்ற வள்ளுவரின் வாக்கிக்கேற்ப அனைத்து உயிர்களுக்கும் பிறப்பு ஒன்றே ஆகும்.

**சாதியாவது ஏதடா சலந்திரண்ட நீரலோ**

**பூத வாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ**

**காதில்வாளி காரைகம்பி பாடகம் பொன் ஒன்றலோ**

**சாதி பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ** **(**சிவவாக்கியர் பாடல்.47)

என்கிறார் சிவவாக்கியர்.

கோத்திரம் குலம் பேசுபவர்களை கண்டிக்கிறார் அப்பர்.

**சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்**

**கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?**

**பாத்திரம் சிவம் என்றும் பணிதிரேல்**

**மாத்திரைக்குள் அருளுமாற் பேறரே** (திருநாவுக்கரசர் தேவாரம் 5:60:3)

சாதி பெருமை பேசி பயன் ஒன்றும் இல்லை. வீணர்களே சாதி பெருமை பற்றி பேசுவர். இறைவன் படைப்பில் மனிதர்கள் அனைவரும் சமம் மனிதருக்குள் எந்த பாகுபாடும் கிடையாது.

**இறைவன் ஒருவனே**

இறைவன் ஒருவனே என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**

**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே** (திருமந்திரம் பாடல் -2104)

என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.இறைவன் உள்ளத்தில் உள்ளான் என்பதை சிவவாக்கியர்,

**நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்** (சிவவாக்கியர் பாடல்.496)

**கோயிலும் மனத்துளே குலங்களும் மனத்துளே** (சிவவாக்கியர் பாடல்.33)

**பூவும் நீரும் என் மனம், பொருந்துகோயில் என் உளம்**(சிவவாக்கியர் பாடல்.195)

என்று பாடியுள்ளார் சிவவாக்கியர்.

**இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி**

**இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான் இறைவனே**

**எந்நாய் என இரங்கும் எங்கள் மேல் வெந்துயரம்**

**வந்தால் அது மாற்றுவான் 18**

என இறைவனே உலகத்தை தோற்றுவித்து அனைவருக்கும் தந்தையாகவும் தாயாகவும் காட்சி தருகிறான். எனவே மக்களுக்குள் பாகுபாடு தேவையற்றது என்கிறார். அன்பு மட்டுமே இறைவனை காண்பதற்கான வழி. அன்பின் வழியே இறைவனை அடைய முடியும் என்பதை,

**சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டு த் தடுமாறும் 19**

என்றும்

**பூதங்கள் ஐந்தாகிப் புலனாகி பொருளாகிப்**

**பேதங்கள் அனைத்துமாய் பேதமிலாப் பெருமையனை20**

என்றும் மாணிக்கவாசகர் கூறுவதிலிருந்து உணரலாம்.

“சமயம் மனிதரை நெறிப்படுத்துவது, முறைப்படுத்துவது. சமயம் ஒரு தூய்மையான வாழ்க்கை முறை. சமய வாழ்க்கையில் புலன்கள் தூய்மையடையும். பொறிகள் இன்ப வைப்புக்களாக மாறும். இதயம் விரியும். ஈர அன்பு பெருகி வளரும். வேறுபாடுகள் மறையும். ஒருமை தோன்றும். ஓருலகம் மலரும். இதுவே சமயத்தின் பயன்”21

என்ற குன்றக்குடி அடிகளாரின் கருத்து இங்கு நினைக்கத்தக்கது.எங்கும் இறைவன் உள்ளான் என்பதை சிவவாக்கியர்,

**பரம் இலாதது எவ்விடம்? பரம் இருப்பது எவ்விடம்?**

**அறம்இலாத பாவிகட்குப் பரம்இலை அஃது உண்மையே….** (சிவவாக்கியர் பாடல்.528)

மேலும் அறநெறிப்படிப்படி வாழாதவர்களுக்கு இறைவன் துணை நிற்பதில்லை என்பதையும் அறிவுறுத்துகிறார்.திருஞானசம்பந்தரும் இறைவன் ஒளி வடிவமாக மனத்துள்ளே இருக்கிறான் என்பதை

**ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்**

**சோதிக்க வேண்டா சுடர்விட்டு எங்கள் சோதி…22**

என்றவாறு பாடுகிறார்.

மனிதர்களின் உணர்வாக உள்ளத்தில் இறைவன் விளங்குகிறான் என்பதை அப்பர்,

**நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன் 23** என்றும்

**நினைக்கும் நெஞ்சின் உள்ளார்24**

என்றும்

**நினைப்பவர்கள் மனத்துக்கோர் வித்தும் ஆனாய் 25**

என்றும் பல இடங்களில் பாடுகிறார்.

**முடிவுரை**

புலவர் புராணம் என்பது சைவப் புலவர்களின் வாழ்க்கை வரலாறுகளை மட்டும் எடுத்துரைக்கும் நூலாக இல்லாமல், அவர்களின் உயர்ந்த வாழ்வியல் விழுமியங்களையும் சமூகப் பொறுப்புணர்வையும் வெளிப்படுத்தும் முக்கியமான இலக்கியமாகும். இதில் இடம்பெறும் சைவப் புலவர்கள் இறைபற்று, ஒழுக்கம், தாழ்மை, பக்தி, அறநெறி, கல்விச் சிறப்பு, மனிதநேயம் போன்ற உயரிய பண்புகளை தங்கள் வாழ்க்கையின் மூலம் எடுத்துக்காட்டுகின்றனர்.அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் மனிதன் எவ்வாறு ஒழுக்கத்துடனும் பக்தியுடனும் வாழ வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலாக அமைகின்றன. குறிப்பாக, சமுதாய நலன், இறைநம்பிக்கை, பிறருக்கு உதவும் மனப்பான்மை போன்ற பண்புகள் இன்றைய காலத்திலும் அவசியமான வாழ்வியல் மதிப்புகளாகத் திகழ்கின்றன.எனவே, புலவர் புராணத்தில் இடம்பெறும் சைவப் புலவர்களின் வாழ்வியல் விழுமியங்கள் தமிழ் சமுதாயத்தின் பண்பாட்டு மரபையும் அறநெறி சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதோடு, இன்றைய தலைமுறைக்கும் பயனுள்ள வாழ்க்கைப் பாடங்களை வழங்குகின்றன என்று இவ்வாய்வு கட்டுரை மூலம் அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

[1]. திருநாவுக்கரசர் தேவாரம், ஐந்தாம் திருமுறை, பா.727
[2]. திருஞானசம்பந்தர் தேவாரம், ஒன்றாம் திருமுறை.பா.639
[3]. பட்டினத்தார் பாடல்-14
[4]. ஜெகதா (உ.ஆ) பாம்பாட்டிச் சித்தர் வாழ்வும் வாக்கும்,பா.68.
[5]. அரு.இராமநாதன்(ப.ஆ) ஞானக்கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள், பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்,பா.8
[6]. வா.சரவண முத்துப்பிள்ளை (ப.ஆ) பெரிய ஞானக்கோவை, இடைக்காடர் பாடல்,க.எ.18
[7]. திருஞானசம்பந்தர் தேவாரம், இரண்டாம் திருமுறை, பா.1056
[8]. 8.திருநாவுக்கரசர் தேவாரம், ஐந்தாம் திருமுறை, பா.432
[9]. 9.திருநாவுக்கரசர் தேவாரம் ,நான்காம் திருமுறை, பா.41
[10]. க.பஅறவாணன்(உ.ஆ),புதியநோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு, திரிகடுகம்,பா.18
[11]. திருநாவுக்கரசர் தேவாரம், ஐந்தாம் திருமுறை, பா.66
[12]. திருநாவுக்கரசர் தேவாரம், நான்காம் திருமுறை, பா.499
[13]. மேற்படி ,நான்காம் திருமுறை, பா.505
[14]. மேற்படி, ஐந்தாம் திருமுறை, பா.206
[15]. திருஞானசம்பந்தர் தேவாரம் ,முதல் திருமுறை, பா.1251
[16]. திருநாவுக்கரசர் தேவாரம், நான்காம் திருமுறை, பா.383
[17]. திருஞானசம்பந்தர் தேவாரம், முதலாம் திருமுறை, பா.937
[18]. ச.வே.சு.தொகுப்பு, பன்னிரு திருமுறை,ப.950.பா.48

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

[19]. வ.சிவசங்கரன், திருவாசகம் விளக்கவுரை, ப.280.பா.5

[20]. மேற்படி, ப.282,பா.10

[21]. குன்றக்குடி அடிகளார். தவத்திரு, நமது நிலையில் சமயம் சமுதாயம்,ப.3

[22]. திருஞானசம்பந்தர் தேவாரம், மூன்றாம் திருமுறை, பா.5

[23]. ஐந்தாம் திருமுறை, திருக்குறுந்தொகை, பா.1082

[24]. மேற்படி, பா.1338

[25]. மேற்படி, பா.7